(

சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – 2011–2012–ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை – புதிய அறிவிப்புகள்– 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சி காட்டும் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கும் 100 விழுக்காடு தேர்ச்சி காட்டும் பட்டதாரி/முதுகலைப்பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கும் ஊக்கத் தொகை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் (ஆதிந 7) நலத்துறை

அரசாணை (நிலை) எண். 121

நாள்: 28.11.2011
திருவள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 12.
படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண்.32 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை நாள்.18.02.1993.
2. ஆதிதிராவிடர் நல ஆணையரின் கடித ந.களண்.ஏ3/19216/2011 நாள். 24.08.2011. மற்றும் 31.10.2011.

---

ஆணை:

மேலே 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 75 விழுக்காடு முதல் 100 விழுக்காடு வரை தேர்ச்சி காட்டும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு ரூ.1,500/–ம், 60 விழுக்காடு முதல் 74 விழுக்காடு வரை தேர்ச்சி காட்டும் மேல்நிலை மற்றும் உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு ரூ.1000/–ம், 100 விழுக்காடு தேர்ச்சி காட்டும் பாட ஆசிரியர்களுக்கு ரூ.750–ம் ஊக்கத் தொகையாக ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றது.

2. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மீதான 2011–2012ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின் போது, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்கள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகளில், 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சி காட்டும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை/மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில், முதன்முறையாக ரூ.10,000/–ஊக்கப்பரிசாக வழங்கப்படும் என்றும், அதேபோன்று 100 விழுக்காடு தேர்ச்சி காட்டும் முதுகலைப்பட்டதாரி/பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கு ஊக்கப்பரிசாக ரூ.5,000/–மும் வழங்கப்படும் எனும் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

3. மேலே 2-ல் படிக்கப்பட்ட கடிதத்தில், தற்போது நடைமுறையில் உள்ள திட்டத்தினை செயல்படுத்தும் பொருட்டு 2011-2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.6,13,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றும், 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின் போது அமைச்சர் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்) அவர்களின் புதிய அறிவிப்பின்படி ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில், 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சிக் காட்டும் தலைமை ஆசிரியர்களுக்கு தலா ரூ.10,000/-மும், அதே போன்று 100 விழுக்காடு தேர்ச்சிக் காட்டும் பட்டதாரி / முதுகலைப் பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5,000/-மும் வழங்கப்படும் பட்சத்தில் உத்தேசமாக ஆண்டுக்கு ரூ.18,80,000/- அரசுக்கு கூடுதலாக செலவாகும் என்று ஆணையர், ஆதிதிராவிடர் நலம் அவர்கள் தெரிவித்துள்ளார்.

4. மேலே பத்தி 2-ல் உள்ள ஆதிதிராவிடர் நல ஆணையரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு, அரசாணை (நிலை) எண்.32 ஆதி(ம)பந துறை நாள். 18.02.1993ன்படி தற்போது நடைமுறையிலுள்ள திட்டத்தினை 2011-2012-ஆம் ஆண்டில் செயல்படுத்திய பின்னர், இத்திட்டத்தினை கைவிடலாம் என்றும், 2011-2012-ஆம் ஆண்டு புதிய அறிவிப்பிற்கு ஏற்ப, 2012-2013-ஆம் கல்வியாண்டு முதல் 10 மற்றும் 12ம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் 95 விழுக்காட்டிற்கு மேல் தேர்ச்சிக் காட்டும் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் உண்டி உறைவிட உயர் நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு ரூ.10,000/-மும், 100 விழுக்காடு தேர்ச்சிக் காட்டும் பட்டதாரி/முதுகலைப்பட்டதாரி பாட ஆசிரியர்களுக்கு ரூ.5,000/-மும் ஊக்கத் தொகையாக வழங்கும் திட்டத்தை செயல்படுத்தலாம் என்று அரசு ஆணையிடுகிறது.

5. இப்புதிய திட்டத்திற்கான செலவினம் 2012-2013-ஆம் ஆண்டு முதல் கீழ்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

> "2225 ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் -01-ஆதிதிராவிடர் நலன் -277-கல்வி I திட்டத்தில் சேராதது-AG-ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு பரிசுகள் வழங்குதல்-59-பரிசுகளும் வெகுமதிகளும் (து.தொ.கு.2225-01-277- AG-5904)"

6. மேலும் 2012ஆம் ஆண்டில் நடைபெறவிருக்கும் 10 மற்றும் 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வின் முடிவிற்குப் பின் புதிய ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெறும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரி/முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை கணக்கிட்டு, பழைய ஊக்கத்தொகைத் திட்டத்தின் கீழ் 2012-2013ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்படும் தொகைக்கு மேல் கூடுதலாக தேவைப்படும் தொகையினை 2012-2013ஆம் ஆண்டு திருத்த மதிப்பீடு / இறுதி திருத்திய நிதி ஒதுக்கத்தில் ஒதுக்கீடு செய்ய உரிய கருத்துருவினை நிதித்துறைக்கு அனுப்புமாறு ஆதிதிராவிடர் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

7. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.61458/நிதி/ஆதி(ம)பந துறை நாள்.25.11.2011–ல் ஒப்புதல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. சு. ஜீவரத்தினம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
ஆதிதிராவிடர் நல ஆணையர், சென்னை–5.
பழங்குடியினர் நல இயக்குநர், சென்னை–5
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்.
சம்பள கணக்கு அலுவலர், சென்னை–5/35/79
மாநில கணக்காய்வுத் தலைவர் சென்னை–18/35 (பெயரில்)
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.

நகல்:
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதித்(ஆதி (ம) பந) துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.
28/11/2011.